IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 453/2019

சாட்சி : DW1

பெயர் : அனுராதா தேதி: 25-06-2024

**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

பிரதிவாதிகள் தரப்பில் மேலும் குறியீடு செய்ய ஆவணங்கள் எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டு அது பதிவு செய்யப்பட்டது. தாவாவை தள்ளுபடி செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ-A1 ஆவணத்தில் முதல் மற்றும் இரண்டாம் பக்கத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். வாதி, நான் அவரிடம் கடன் வாங்கியதாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளார் என்றால் ஆமாம். நரேஷ்பாபுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்ற சொன்னால் சரியல்ல. சம்மந்தம் உள்ளது. நரேஷ் பாபு என்னுடைய தம்பி. நான் அவரிடம் தான் ஆவணங்கள் கொடுத்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.த.சா.ஆ-B1 முதல் பி.வா.த.சா.ஆ-B7 ஆவணங்களில் தாவா கடன் பற்றியோ, தாவா கடன் ஒப்பந்தம் பற்றியோ எந்த விவரமும் இல்லை என்று சொன்னால் சரிதான். நானும், எனது கணவரும் வாதியிடம் 12.11.2017 அன்று ரூ. 15,00,000/- கடன் பெற்றுக்கொண்டு வா.த.சா.ஆ-A1 கடன் பத்திரம் எழுதிக்கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் வாங்கிய கடனை திரும்ப செலுத்தாமல் இருக்க சம்மந்தம் இல்லாத ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/- L. கலைவாணி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.